# மட்/கமு/புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

| தரம் - 06 | சைவசமயம் | நேரம்: 2 மணித்தியாலம் |
|---|---|---|
| பெயர்/சுட்டெண் : | | புள்ளிகள் : |

## பகுதி – I

**01) பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

1. ஓங்காரப் பொருளாக விளங்குபவர்.
   1) முருகன் 2) பிள்ளையார் 3) பிரமா 4) விஷ்ணு

2. சைவசமயத்தவர்களின் முழுமுதற் கடவுள்.
   1) சிவபெருமான் 2) விநாயகர் 3) நந்தி 4) முருகன்

3. பஞ்ச புராணங்களில் இரண்டாவதாக ஓதப்படுவது.
   1) தேவாரம் 2) திருவாசகம் 3) திருவிசைப்பா 4) திருப்பல்லாண்டு

4. “அரிது அரிது மானிடராதல் அரிது” எனக் கூறியவர்.
   1) பாரதியார் 2) விபுலானந்தர் 3) ஔவையார் 4) திலகவதியார்

5. திருஞானசம்பந்தர் பிறந்த ஊர்.
   1) சிதம்பரம் 2) திருக்கோலக்கா 3) சீர்காழி 4) திருவையாறு

6. ஆன்மா லயப்படும் இடம்.
   1) பாடசாலை 2) ஆலயம் 3) வீடு 4) மைதானம்

7. திருமுறைகளின் எண்ணிக்கை.
   1) 12 2) 14 3) 16 4) 18

8. பசுவதைக்கு அஞ்சி நாட்டை விட்டுச் சென்றவர்.
   1) பாரதியார் 2) விபுலானந்தர் 3) சேக்கிழார் 4) சுவாமி ஞானப்பிரகாசர்

9. கண்ணைக் கொத்திக் காக்கைப் பிள்ளையார் என அழைக்கப்படும் ஆலயம்.
   1) திருக்கேதீச்சரம் 2) திருக்கோணேச்சரம்
   3) மாமாங்கப் பிள்ளையார் 4) பறாளை விநாயகர் ஆலயம்

10. சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் பண்டிகை.
   1) தைப்பொங்கல் 2) தீபாவளி 3) புத்தாண்டு 4) ஓணம் பண்டிகை

**(10 x 2 = 20 புள்ளிகள்)**

**02) சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

1. மஞ்சள் கொண்டு விநாயகர் திருவுருவம் பிடிக்கலாம். ( )
2. பஞ்ச புராணங்களில் திருப்புகழும் அடங்கும். ( )
3. அடுத்தவருக்கு முடிந்த வரையில் தர்மம் செய்ய வேண்டியது சைவசமையிகளின் கடமையாகும். ( )
4. ஆலயத்தில் ஓடி விளையாடலாம். ( )
5. திருநாவுக்கரசருக்கு சூலைநோய் ஏற்பட்டது. ( )

**(5 x 2 = 10 புள்ளிகள்)**



kalvi.lk

**03) பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளியினைப் பூர்த்தி செய்க.**

(தருமம் / கர்ண பரம்பரை / திருக்கோணேச்சரம் / சிறு தெய்வங்கள் / முப்பொருள்கள்)

1. இலங்கையில் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் ……………………………. ஒன்றாகும்.
2. எம்மால் இயன்றவரை …………………………………………………….. செய்தல் வேண்டும்.
3. நாட்டார் தெய்வங்கள் ……………………………………………….. எனவும் அழைக்கப்படும்.
4. ஆலய வரலாறுகளை ……………………………………………. கதை மூலம் அறியலாம்.
5. பதி, பசு, பாசம் என்பவை …………………………………………………………. ஆகும்.

**(5 x 3 = 15 புள்ளிகள்)**

**04)**

1) பின்வரும் திருமுறைகளில் ஒன்றினை அடிமுறை பிழையாது எழுதுக.
2) அதனைப் பாடியவர், பண், தலம் என்பவற்றைக் குறிப்பிடுக.

அ) பித்தா பிறை சூடி……………….

ஆ) இடரினுந் தளரினும்……………..

இ) பூசுவதும் வெண்ணீறு …………..

**(5 x 3 = 15 புள்ளிகள்)**

**05)** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

‘‘திருமுறைகள் தெய்வத் தன்மை பொருந்திய அருட்பாக்கள்’’

1. தேவார முதலிகள் யாவர்?
2. பஞ்ச புராணங்கள் எவை?
3. திருச்சிற்றம்பலம் சொல்லப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?

**(3+4+3 = 10 புள்ளிகள்)**

1) ‘‘விரதங்கள் இறையுணர்வை ஏற்படுத்துகின்றன’’

1. விரதம் பற்றிய வரைவிலக்கணம் யாது?
2. சிவ விரதங்கள் நான்கு தருக.
3. விரத காலங்களில் செய்யத் தகாத செயல்கள் மூன்று தருக.

**(3+4+3 = 10 புள்ளிகள்)**

2) ‘‘சைவ சமயத்தை வளர்ப்பதில் அடியார்கள் பெரும் தொண்டாற்றியுள்ளனர்’’

1. மாறனார் செய்த தொண்டு யாது?
2. சிவனடியாராக வந்தவர் யார்?
3. மாறனார் கதை மூலம் நீர் பெற்றுக் கொண்ட படிப்பினை யாது?

**(3+4+3 = 10 புள்ளிகள்)**

3) ‘‘சைவ சமயத்தவர்களின் வாழ்வுடன் சடங்குகள் நெருங்கிய தொடர்புடையவை’’

1. வாழ்வியல் சடங்குகள் மூன்று தருக.
2. காது குத்துவதற்குச் சிறப்பான நாள் எது?
3. ஏடு தொடக்குதல் சடங்கின் வேறு பெயர்கள் யாவை?

**(3+4+3 = 10 புள்ளிகள்)**



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி Kalvi.lk

Whatsapp
075 287 1457